# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 06.07.2018

## தமிழக நிகழ்வுகள்

- ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் (Integrated Financial and Human Resource Management system) தமிழகத்தில் நவம்பர் மாதத்தில் அமைக்க உள்ளதாக மாநில கருவூலத்துறை தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் முதல் முறையாக ஜுலை 05 முதல் கோவை முதல் சேலம் வரை செல்லும் இடைநில்லா அரசுப் பேருந்தில் நடத்துனர் இல்லாமல் இயக்கப்பட்டது.

## இந்திய நிகழ்வுகள்

- 19-வது உணவு தொடர்பான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உலக மாநாடு(world congress of food Science and Technology) அக்டோபர் மாதத்தில் நவி மும்பையில் நடைபெற உள்ளது.
- கர்பிணிகளின் நலனுக்காக தொடங்கப்பட்ட 'பிரதம மந்திரி சுரக்ஷித் மாத்ருத்வ் (Pradhan Mantri Surakshit Matritva Abhiyan) திட்டத்தை செயல்படுத்தும் சிறந்த மாநிலமாக 'இமாச்சல பிரதேசம்' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- PMSM→ இத்திட்டமானது தாய்மார்களின் இறப்பு விகிதம்(Materinal Mortality Rate), குழந்தை இறப்பு விகிதம்(Infant Mortality Rate) ஆகியவற்றை குறைக்க உருவாக்கப்பட்டது.

- உத்திரப் பிரதேச மாநில அரசு ஜூலை-15ம் தேதி முதல் மாநிலம் முழுவதும் பிளாஸ்டிக் மற்றும் பாலீத்தின் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

- GST Verify – என்னும் செயலி நுகர்வோரிடமிருந்து ஜி.எஸ்.டி வரி வசூலிக்கும் நபர் அதற்கான தகுதி உடையவரா இல்லையா என்பதை சரிபார்க்க மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்கவரி ஆணையம் நுகர்வோர் பாதுகாப்பிற்காக வெளியிட்டுள்ளது.

**உலக நிகழ்வுகள்**

- சீனா தனது நாட்டில் பல்வேறு பகுதிகளில் வாழும் குடிமக்களை கண்காணிப்பதற்காக GRS வசதியுடன் பொருத்தப்பட்ட Dove என்று பெயரிடப்பட்ட பறவை போல் பறக்கும் வடிவிலான உளவு விமானங்களை உருவாக்கியுள்ளது.

**நியமனங்கள்**

- ஹைதராபாத் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக தோட்டத்தில் பி. ராதாகிருஷ்ணன் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
  **குறிப்பு**
  - ஹைதராபாத் உயர்நீதிமன்றம் 1956-ல் தொடங்கப்பட்டது. ஜூன் 2, 2014 முதல் இந்நீமன்றம் ஆந்திரா மற்றும் தெலுங்கானா இரு மாநிலங்களுக்கும் பொதுவான நீதிமன்றமாக செயல்படுகிறது.

**புத்தகங்கள்**

- ‘அகிம்சா’ (Ahimsa) என்ற புத்தகத்தை எழுதியவர் ‘சுப்ரியா கேல்கர்’